**செய்தி வெளியீடு எண் : 1391** **நாள் : 12.08.2022**

**செய்தி வெளியீடு**

**இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்ட தமிழ்நாட்டைச் சேர்ந்த 9 மீனவர்களையும் அவர்களது மீன்பிடிப் படகினையும் விரைவில் விடுவிக்க நடவடிக்கை மேற்கொள்ள வலியுறுத்தி மாண்புமிகு ஒன்றிய வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் அவர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் கடிதம்.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், மாண்புமிகு ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கர் அவர்களுக்கு எழுதியுள்ள கடிதத்தில், தமிழ்நாட்டைச் சேர்ந்த ஒன்பது மீனவர்கள் 6-8-2022 அன்று கடலுக்கு மீன்பிடிக்கச் சென்ற நிலையில், 10-8-2022 அன்று இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு, இலங்கையிலுள்ள திரிகோணமலை கடற்படைத் தளத்திற்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர் என்றும் கைது செய்யப்பட்ட மீனவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகினையும் இலங்கை அரசு விரைவில் விடுவிக்கத் தேவையான தூதரக நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டுள்ளார்.

- - - - -

**Text of D.O.Letter of Hon'ble Chief Minister of Tamil Nadu Thiru. M.K.Stalin to the Hon'ble Union Minister of External Affairs Dr. S. Jaishankar requesting to prevail upon the Sri Lankan Government through appropriate diplomatic channels for the release of nine Tamil Nadu fishermen and their fishing boat.**

---

I wish to draw your attention to the apprehension of nine Indian fishermen and their mechanized fishing boat bearing registration No: IND-TN-06-MM-6534 on 10.08.2022 by the Sri Lankan Navy. The nine fishermen ventured into the sea for fishing on 06.08.2022 at 11.00 p.m. from Nagapattinam fishing harbor. The apprehended fishermen along with their boat have been taken to Triconmalee Naval Base, Sri Lanka. The details of fishermen apprehended are annexed herewith.

I request you to kindly prevail upon the Sri Lankan Government through appropriate diplomatic channels for the release of the nine Tamil Nadu fishermen along with their fishing boat at the earliest.

------

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in